செ.வெ.எண்: 58 நாள்: 22.11.2016

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையில் புதுக்கோட்டை, மாவட்ட மீன்வள உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் தட்டாமனைப்பட்டி, அறந்தாங்கி மற்றும் கோட்டைப்பட்டினம் மீன்வள சார் ஆய்வாளர் அலுவலகங்களில் மீன்வள மேற்பார்வையாளர் தரம்-2 பணியிடங்களை நிரப்ப பொதுப்பிரிவினர் (Priority), ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர். மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (Priority) கீழ்க்காணும் தகுதியுள்ள நபர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**மீன்வள மேற்பார்வையாளர் தரம்-2 பணிக்குத் தேவையான தகுதிகள்:**

1)எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் மீன்வளத்துறையில் மீன்வள மேற்பார்வையாளர் தரம்2-க்கு மீன்பண்ணையில் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் பணிகளான நாற்றாங்கால் தயாரித்தல், மீன்பிடித்தல், வலைப்பின்னுதல் சினை மீன்கள் பராமரித்தல், மீன்களுக்கு உணவிடுதல், தூண்டுதல் முறையில் மீன்கள் இனப்பெருக்க பணிகளை மேற்கொள்ளுதல், அரசுக்கட்டுப்பாட்டிலுள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்வள பாதுகாப்பினை உறுதிப்படுத்திட ரோந்து பணிகள் மேற்கொள்ளுதல், தேவையின் அடிப்படையில் கடலில் படகில் சென்று ரோந்து பணி மேற்கொள்ளுதல், மீன்பிடி தொழிலுக்காக கடலுக்கு செல்லும் மீன்பிடி கலன்களுக்கு டோக்கன் வழங்குதல், உரிய பதிவேடுகள் பராமரித்தல், நீர்த்தேக்கத்தில் இரவு நேரங்களில் ரோந்துபணி மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2) தமிழ்நாடு மீன்துறை சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகளில் விதி 5-ல் குறிப்பிட்டுள்ளவாறு மீன்வள உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் 1.5.2016 அன்று 30 வயதிற்கு உட்பட்டு இருக்க வேண்டும். ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு வயது உச்ச வரம்பு 35 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3) பொதுப்பிரிவினர் (Priority).

4)ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர் (மகளிர் ஆதரவற்ற விதவை).

5)மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (Priority).

இப்பணியிடத்திற்கு ஊதிய விகிதம் ரூ.5200-20200 தர ஊதியம் ரூ.2000-

மீன்வள மேற்பார்வையாளர் தரம்2-க்கு மீன்பண்ணையில் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் பணிகளான நாற்றாங்கால் தயாரித்தல், மீன்பிடித்தல், வலைப்பின்னுதல் சினை மீன்கள் பராமரித்தல், மீன்களுக்கு உணவிடுதல், தூண்டுதல் முறையில் மீன்கள் இனப்பெருக்க பணிகளை மேற்கொள்ளுதல், அரசுக்கட்டுப்பாட்டிலுள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்வள பாதுகாப்பினை உறுதிப்படுத்திட ரோந்து பணிகள் மேற்கொள்ளுதல், தேவையின் அடிப்படையில் கடலில் படகில் சென்று ரோந்து பணி மேற்கொள்ளுதல், மீன்பிடி தொழிலுக்காக கடலுக்கு செல்லும் மீன்பிடி கலன்களுக்கு டோக்கன் வழங்குதல், உரிய பதிவேடுகள் பராமரித்தல், நீர்த்தேக்கத்தில் இரவு நேரங்களில் ரோந்துபணி மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மேற்காணும் தகுதியுடைய நபர்கள் தங்களது கல்விச்சான்றிதழ், குடும்ப அட்டை நகல் சான்றொப்பமிடப்பட்டது மற்றும் 2 புகைப்படங்கள் (பாஸ்போர்ட் சைஸ் போட்டோ) ஆகியவற்றுடன் கூடிய விண்ணப்பத்தினை 19.11.2016 முதல் 07.12.2016 முடிய உள்ள நாட்களுக்கு காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை மீன்வளத் துணை இயக்குநர் (மண்டலம்), 17/2 சமது பள்ளித்தெரு, காஜா நகர், திருச்சி-20 என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப. கேட்டுக் கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**